# மாலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 09 திங்கட்கிழமை 25.12.2023 அதிர்வு 147


## 7 நாள்களுக்குள் 13,666 பேர் கைது

### 1,097 பேருக்குப் புனர்வாழ்வு

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய ஒப்பரேஷன்' நடவடிக்கையின் கீழ் 04




# ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம்:

# கூட்டமைப்பு அவசரப்படமாட்டாது!

## அதன் தலைவர் சம்பந்தன் கூறுகின்றார்

(சீ.ஏ.தமிழ்மாறன்)

"ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது? அல்லது தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அது தொடர்பில் இன்னமும் நாம் யோசிக்கவும் இல்லை."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 04

# பாதாளக் குழு உறுப்பினர் ரொஷானும் அவரின் நண்பரும் சுட்டுப் படுகொலை!

## தென்னிலங்கையில் அதிகாலை பயங்கரம்

கொழும்பு, புறநகர் பகுதியான பாதுக்க, துந்தான பகுதியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ள இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழு உறுப்பினர் மன்னா ரொஷான் மற்றும் அவரது சகா ஒருவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர இலக்கத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இன்று அதிகாலை இரண்டு மணியளவில் 2 சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன என்று பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.



பாதுக்கவில் உள்ள ஏல காணியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாம்பல் நிற ஜீப்பில் ஒருவரின் சடலம் காணப்பட்டதுடன், மற்றைய சடலம் அருகில் காணப்பட்டது.

ஜீப்புக்குள் கண்டெடுக்கப்பட்ட 04




# யாழ். சிறையிலிருந்து 16 கைதிகள் விடுதலை

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 16 கைதிகள் இன்றையதினம் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ. உதயகுமார தலைமையிலான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகளை சிறைச்சாலையில் இருந்து இன்று காலை 9 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக வழியனுப்பி வைத்தனர்.

சிறு சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 1004 பேர் இன்று விடுதலை செய்யப்படுகின்றனர்.









# இரும்புச்சத்து உணவுகள் நிறைந்துள்ள சூழலில் குருதிச்சோகையால் பாதிப்படைவது ஆச்சரியம்!

## வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸடீன் கவலை தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இயற்கை வளங்கள் நிறைந்து, நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட இந்த நாட்டில் இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறான அழகிய நாட்டில் வாழ்ந்து கொண்டு குருதிச்சோகை நோயால் பாதிக்கப்படுவது ஆச்சரியமாக உள்ளது. இது பெரும் கவலையளிக்கிறது.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் குருதிச்சோகை நோயைக் குறைக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்தியத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் நோய்களில் பெரும்பாலானோருக்குக் குருதிச்சோகை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனைக் குறைக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

கல்முனை பிராந்தியத்தில் கர்ப்பிணித் தாய்மாருக்கு ஏற்படும் இந்த நோயானது தற்போது 26 வீதமாகக் காணப்படுகின்றது. இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கி எதிர்வரும் ஆண்டில் இதனைக் குறைப்பதற்குப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

கடல் வளத்தையும் மண் வளத்தையும் கொண்டுள்ள எமது நாட்டில் இரும்புச் சத்து நிறைந்த உணவுகள் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இந்த நோயால் பாதிக்கப்படுவது கவலையான விடயமாகும்.

கற்பிணித் தாய்மார்களுடைய போசாக்கு உணவு அவர்களது ஆரோக்கிய வாழ்வு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும் .– என்றார்.

பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதார மருத்துவத்துவ தாதியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மகப்பேற்று வைத்திய நிபுணர் பேராசிரியர் மார்க்கண்டு திருக்குமார், டாக்டர் விவேக் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.



# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது? இன்னும் தீர்மானம் இல்லை என்கிறார் அரவிந்தகுமார்

(ராமு தனராஜா)

"ஜனாதிபதித் தேர்தலே அடுத்த வருடம் நடைபெறும். அத்தேர்தலில் நான் யாரை ஆதரிப்பது என இதுவரையில் தீர்மானிக்கவில்லை."

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பதுளை / தெல்பெத்த இல 1 தமிழ் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அடுத்த வருடம் நவம்பர் மாதத்துடன் ஜனாதிபதியின் பதவிக் காலம் நிறைவடைவதால் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெற இருக்கின்றது. அதேவேளை, நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை அதன் பதவிகாலம் 2025ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் வரை இருக்கின்றது.

ஆகவே, அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, அடுத்த வருட இறுதியிலே ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நிச்சயமாக நடக்கும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலிலே யாரை ஆதரிப்பது என இப்போதே சொல்ல முடியாது. ஏனெனில் இதுவரையில் யார் யார் ஜனாதிபதி வேட்பாளர்களாகக் களமிறங்க போகின்றார்கள் எனத் தெரியாது. எனவே, களமிறக்கப்பட்ட பின்னர்தான் நான் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பேன்.



நாடளாவிய ரீதியில் தற்போது விசேட சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் பல்வேறு நாசகாரச் செயல்களை நாங்கள் தடுக்கக் கூடியதாக இருக்கின்றது. விசேடமாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் பிடியிலே சிக்கியுள்ளதை நாம் தினமும் பார்க்க கூடியதாக இருக்கின்றது.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் மிகுந்த அக்கறை காட்டி செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த விடயம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமது எதிர்ப்பார்ப்பு ஆகும்." – என்றார்.

# மின்சார வேலியில் சிக்கி ஆண் ஒருவர் உயிரிழப்பு!

அம்பகஸ்தோவ, தங்கமுவ பகுதியில் தோட்டமொன்றில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதமான மின்சார வேலியில் சிக்கி ஆண் ஒருவர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பகஸ்தோவ, பஹல தங்கமுவ, மிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது தோட்டத்துக்கு அருகில் வனவிலங்குகளை வேட்டையாட அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தோட்டத்தின் உரிமையாளர் எனக் கூறப்படும் 35 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அம்பகஸ்தோவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 7 நாள்களுக்குள்...

7 நாள்களுக்குள் 13 ஆயிரத்து 666 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 717 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். 174 பேர் தொடர்பில் சொத்து சம்பந்தமான விசாரணகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆயிரத்து 97 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 17 முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரையான 7 நாள்களுக்குள் 9 கிலோ 82 கிராம் ஹெரோயினும், 4 கிலோ 679 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 273 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன. 9 இலட்சத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்தவ தேவாலயங்களை அண்மித்த பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நாளைமறுதினம் 27 ஆம் திகதி முதல் யுக்திய ஒப்பரேஷன் முழு அளவில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

### பாதாளக் குழு...

சடலம் பாதாள உலகக் குழு உறுப்பினர் காரியவசம் அத்துகோரல ரொஷான் இந்திக்க என்றழைக்கப்படும் மன்னா ரொஷானின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

30 மற்றும் 37 வயதுகளுடையவர்கள் இவர்கள். பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலால் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

### ஜனாதிபதி வேட்பாளர்...

ஒருசில தமிழ்க் கட்சிகள் அவசரப்பட்டு தீர்மானம் எடுப்பதுபோல் நாம் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாது.

தமிழ் மக்கள் பக்கம் நின்றே நாம் தீர்க்கமான முடிவு எடுப்போம். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலோ, அதன் வேட்பாளர் தொடர்பிலோ நாம் அவசரப்பட மாட்டோம். முதலில் உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு வரட்டும். அதன் பின்னர் அது பற்றி யோசிப்பம்." – என்றார்.




# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி மக்களுக்கு உதவிகள்

(த.சுபேசன்)

வெள்ள அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள தென்மராட்சி, நாவற்குழி பிரதேச மக்களுக்கு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி லவ்லி கிறீம் ஹவுஸ் உரிமையாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி ஊடாக உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாவற்குழி அற்புத அன்னை சன சமூக நிலையம் மற்றும் சியோன் தேவாலயம் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கே இவ்வாறு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.



உலர் உணவுப் பொருள்கள், பாய் மற்றும் தலையணை ஆகியன இதன்போது வழங்கப்பட்டுள்ளன.

உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கம்பளை மாணவருக்கு ஊடகச் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்கள் பாடவிதானத்திலும் ,இணைப் பாடவிதானத்திலும் தங்கள் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதற்கிணங்க உலக அறிவை மேம்படுத்திப் பயனுள்ள பிரஜைகளாக்கும் நோக்கில் ஜே.எம்.மீடியா அமைப்பு கம்பளை பிரதேச மாணவர்களுக்கு ஊடக செயலமர்வு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

ஜே.எம்.மீடியா அமைப்பின் தலைவரும், ஊடகவியலாளருமான ராஸிட் மல்ஹர்தீன் தலைமையில் கம்பளை அல் ஹிக்மா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த ஊடகச் செயலமர்வில் கம்பளை முஸ்லிம் வித்தியாலயம், அல் மினா முஸ்லிம் வித்தியாலயம், அல் ஹிக்மா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேவை புதிய கல்வி முறைமை

தற்போதுள்ள பாடசாலைக் கல்வி முறை மற்றும் அரச பல்கலைக்கழக கல்வித் திட்டம் போன்றவை காலாவதியானவை. வளர்ந்து வரும் நவீன உலகுக்குப் பொருத்தமானவை அல்ல. மாணவர்களில் இயல்பாக உள்ள கற்பனா சிந்தனையைத் தூண்டக் கூடியனவாகவோ அல்லது திறன் மிக்கனவாகவோ அவை இல்லை.

- இலங்கைக் கல்வி மன்றத்தின் இணை நிறுவுநரும், கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளருமான கலாநிதி தாரா டி மெல் இத்தகைய அவதானிப்பை வெளியிட்டிருக்கின்றார்.

21 ஆம் நூற்றாண்டில், வளர்ந்து வரும் தசாப்தங்களில், புதிய வேலைகளுக்கும் தேவைகளுக்கும் இப்போதுள்ள கல்வி முறை நமது மாணவர்களைப் போதுமான அளவில் தயார்படுத்தவில்லை. சமூகத்தில் தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ளவும், தொடர்ந்து வரக்கூடிய பல் பரிமாணச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கவும் நமது இளைஞர்களை இந்த கல்வி அமைப்பு தயார்படுத்தவே இல்லை என்று அவர் குறை கூறுகின்றார்.

அறிவார்ந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அர்ப்பணிப்புள்ள - திறமையான - போதனசிரியர்கள் நம்மிடம் உள்ளனர். ஆனால் இரண்டு தரப்புகளையும் நேரிய முறையில் இணைத்து, உச்சப் பெறுபேறைப் பெறத்தக்க கல்வி முறைத் திட்டம் இங்கு செயல்முறையில் இல்லை என்பதுதான் பின்னடைவாகும்.

அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பது குறித்து இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய வரவு - செலவு திட்டம் வலியுறுத்துவதுடன், அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அறிவுசார் மூலதனத்தின் வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப அந்த நிதி முறையாகப் பயன்படுத்தப்பட்டாலே ஒழிய, அத்தகைய அதிக ஒதுக்கீடு அர்த்தத்தையோ பயனையோ தராது என்று கலாநிதி தாரா டி மெல் கூறுவதில் அதிக அர்த்தம் உண்டு.

முறையான - பயனுள்ள - உச்ச விளைவுகளை தரத்தக்க - திட்டச் செயற்பாடுகள் களத்தில் - யதார்த்தத்தில் - நடைமுறையில் - இல்லாத நிலையில் எவ்வளவு நிதியை ஒதுக்கியும் அதன் பயன் யாது? விழலுக்கிறைத்த நீராக நிதி பயனற்றுப் போவதுதான் நடக்கும்.

பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் முறைமைகளை நவீன மயப்படுத்துவதில் நாடு பெரும் பின்னடைவு நிலையில் உள்ளது என்ற பொதுவான குற்றச் சாட்டுக் குறித்து அறிவுசார் நிலையிலிருந்து ஆராய வேண்டிய கட்டாயம் இப்போது எழுந் துள்ளது.

நமது கல்விமுறை வெறுமனே பொறியியலாளர்களை, வைத்தியர்களை, தொழில்நுட்பவியலாளர்களை, பட்டதாரிகளை உருவாக்கி சமூகத்துக்குள் தள்ளும் இயந்திரமாக இருந்து விடக் கூடாது.

உலகின் புதிய போக்கு, மாறி வரும் வாழ்க்கை நடைமுறைகள், விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சிச் செல்நெறிகள், எதிர்கால விருத்திகள் ஆகியவற்றுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அறிவுசார் நிலையில் இத்தரப்பினரை நமது கல்விமுறை உருவாக்க வேண்டும்.

இப்போதுள்ள பாடசாலைக் கல்வி முறைமை மற்றும் அரச பல்கலைக்கழக கல்வித் திட்டம் மிகப் பழமையானவை, காலாவதியானவை. மாணவர்களின் உட்கிடையான ஊகிப்புக் கற்பனை மற்றும் படைப்பாற்றல் திறனை தட்டி விட்டுத் தூண்டி, மேலெழச் செய்வதாக அவை இல்லை என்று சுட்டப்படுகின்றது.

தொழில்நுட்பத் திறன், டிஜிட்டல் கல்வியறிவு, பகுப்பாய்வுச் சிந்தனை, ஆக்கபூர்வமான எண்ணப் பாங்கு, தலைமைத்துவப் பண்பு, தொடர்பாடல் தகைமை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி போன்ற திறன்களை மாணவர்கள் மத்தியில் மேம்படுத்துவனவாக நமது கல்வி முறைகள் இப்போது இல்லை என்று குறை கூறப்படுகின்றது.

மாணவர்கள் ஆற்றல் மிகுந்தவர்களாக - அவர்களின் படைப்பாற்றல் திறனை தூண்டிவிடத்தக்கதாக - நிபுணத்துவசார் கல்வி முறைகள், வாய்ப்புகள் நடை முறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

தொடர்ந்தும் பழைய பல்லவியை பாடுவதிலும், குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதிலும் அர்த்தமில்லை. கலாநிதி தாரா டி மெல் சுட்டிக்காட்டியுள்ள பின்னடைவு நிலைமை குறித்து கல்வி அமைச்சும், உயர் கல்வி அமைச்சும் நிபுணத்துவ மட்டத்தில் விரிவாக ஆராய்ந்து, புதிய முடிவுகளை எடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

## ஊடகப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அனுராதபுரம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடத்தவுள்ள Digital Media Advocacy பயிற்சிப் பட்டறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

20 – 30 வயதுக்கிடைப்பட்ட தமிழ் பேசும் இளம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் டிஜிட்டல் ஊடகத்துறையில் ஆர்வமுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக் கிழமைக்குள் https://t.ly/PMz-7 என்ற முகவரியில் தங்களது விண்ணப்பங்க ளைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.



# சௌபாக்கியா வீடமைப்பில் இரு வீடுகள் கையளிப்பு!

(அஸ்ஹர் ஆதம் )

சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலக சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது 12, 17 ஆம் பிரிவுக்கு உட்பட்ட 2 பயனாளிகளுக்கான வீடுகள் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன.

நிகழ்வு அண்மையில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமை யாளர் ஏ. சீ.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதேச செயலர் எம்.எம். ஆசிக் , உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா உட்பட உத்தியோகத் தர்கள் நாடாவை வெட்டி வீடுகளைக் கையளித்தனர்.



# கற்பிட்டியில் பிரியாவிடை நிகழ்வு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் சுமார் 11 வருடங்களாக ஆசிரியர்களாக கடமையாற்றிய இருவருக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களைக் கௌரவித்து வழியனுப்பும் பிரியாவிடை நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ். எம் அரூஸ் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையில் 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளராக நியமனம் பெற்று நான்கு வருடங்கள் சேவையாற்றிய எம்.பீ சுலைஹா உம்மா 2012 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராக நிரந்த நியமனம் பெற்று, பாடசாலையில் சுமார் 11 வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றினார். அவருக்குக் கற்பிட்டி ஐயூப் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்துக்கும் அவரோடு 2012 ஆம் ஆண்டு முதல் அதே பாடசாலையில் 11 வருடங்களாக ஆசிரியராக கடமையற்றிய ஏ.ஏ பஸ்னின் ஆசிரியைக்கு கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்துக்கும் இடம்மாற்றம் கிடைத்துள்ளது.

இருவரையும் கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு பாடசாலை நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இருவருக்கும் நினைவு பரிசில்கள் வழங்கப்பட்டன.







# கைத்தொழில் தளங்களை பார்வையிட்ட அம்பாறை மேலதிக அரச அதிபர் குழு!

(எம். எப். நவாஸ் )

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசன் தலைமையிலான குழு அட்டாளைச்சேனை மற்றும் திருக்கோவில் பிரதேச செயலக எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் தளங்களுக்கான கள விஜயம் மேற்கொண்டது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலர், திருக்கோவில் பிரதேச செயலர் மற்றும் துறைசார்ந்த அலுவலர்களின் பங்களிப்புடன் இந்த விஜயம் இடம்பெற்றது.







# பழைய மாணவருக்குக் கௌரவம்

(பாறுக் ஷிஹான்)

மருதமுனை ஹவுஸ் ஒவ் இங்கிலிஸ்'ஸின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த கலை நிகழ்வும் கௌரவிப்பும் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெஸ்மி எம் மூஸா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்றன.

அல்-மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலருமான வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவரின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக அவர் கல்வி கற்ற பாடசாலையில் கௌரவம் வழங்கப்பட்டது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை இளமாணி வைத்தியர் டீ.எம்.இம்ஜாட், இலங்கை தேசிய வைத்தியசாலையின் கதிரியக்க இளமாணி ஏ.எம்.முகம்மட் றிஸ்வி ஆகியோர் நிகழ்வின் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டனர்.

அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபர் ஐ.உபைத்துல்லா, வியூகம் முகநூல் தொலைக்காட்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ஜனூஸ், மருதமுனை அமேசிங் மோள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜெஸ்மீர் ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அறிவிப்பாளர், ஆசிரியர் ஏ.எல். நயீம் நிகழ்வை நெறிப்படுத்தினார்.





### மன்னார் கட்டையடம்பன் பகுதியில்

# வனவள திணைக்களத்தின் காணிகளில் மக்கள் உளுந்து பயிரிடுவதற்கு அனுமதி

### நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் முயற்சிக்குப் பலன்

(மன்னார் நிருபர்)

மன்னார் கட்டையடம்பன் பகுதியில் வனவளத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் மக்கள் உளுந்து பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் வனவளத் திணைக்களம் மரம் நடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் கட்டையடம்பன் பகுதியில் நீண்ட நாள்களாக மக்கள் பயன்படுத்திய காணியை அண்மையில் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துக் காடாக மாற்றி மரம் நடும் திட்டத்துக்கான நிதியும் ஒதுக்கீடு செய்திருந்தது.

இவ்வாறான நிலையில் கட்டையடம்பன் பகுதியில் தொடர்ச்சியாக பொது மக்களுக்கும் வனவளத் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடு நிலவி வந்தது.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கே. திலீபன் வனவளத் திணைக்களத்தினரோடு மேற்கொண்ட கலந்துரையாடல் அடிப்படையில், மாவட்ட அரச அதிபர் சிபாரிசு செய்யும் பட்சத்தில் அந்தக் காணிகளை மக்களுக்கு விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வர் என்று வனவளத் திணைக்களத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் மாவட்ட செயலகம் காணிகளை விடுவிப்பதற்குப் பதிலாகக் காடாக மாற்றுங்கள் என்னும் அர்த்தத்துடன் வனவள திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியதாக வனவள திணைக்களம் தெரிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் தொடர் முயற்சி காரணமாக வனவள திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் மக்கள் உளுந்து பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் வனவளத் திணைக்களம் மரம் நடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அந்தக் காணியைப் பராமரிப்பதற்கு என்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கும் என்றும் ஒரு தொகை பணமும் அந்தப் பகுதி மக்களுக்கு வனவள திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவி வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே. திலீபன், வனவள திணைக்கள அதிகாரிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சீவரட்ணம், மன்னார் மாவட்ட இளைஞரணி உதவி நிர்வாகச் செயலாளர் சீலன் மற்றும் செல்வகுமார், விஜயகாந்த், மரியசெல்வம் உட்பட பயனாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



# சுனாமி நினைவு நிகழ்வுகள்!

(நூருல் ஹுதா உமர்)

சுனாமி பேரலையில் நூற்றுக் கணக்கானவர்களை இழந்த அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் சுனாமிப் பேரலை நினைவு தின துஆ பிராத்தனையும், குர்ஆன் தமாம் செய்தலும், நினைவுரையும் மாளிகைக்காடு அந்-நூர் ஜும்மா பள்ளிவாசலின் ஏற்பாட்டில் ஜும்மா பள்ளிசாலில் நாளை செவ்வாய்க்கிழமை (26) மாலை இடம்பெறவுள்ளன.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்க ஏற்பாட்டில் ஜனாஸா சங்க வளாகத்தில் நாளை காலை சுனாமி நினைவு தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அஸர் தொழுகையை தொடர்ந்து ஆரம்பமாகும் ஜும்மா பள்ளிவாசலின் இந்த நிகழ்வு மஹரீப் தொழுகை வரை இடம்பெறவுள்ளது.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்க ஏற்பாட்டில் ஜனாஸா சங்க வளாகத்தில் நாளை காலை இடம்பெறவுள்ள நிகழ்விலும் சுனாமிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளுக்காக குர்ஆன் ஓதி தமாம் செய்யப்பட உள்ளது. துஆ பிராத்தனையும் சுனாமி தொடர்பிலான நினைவுரையும் இடம்பெறவுள்ளது.

# திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு ஈழத்து சிதம்பரம் நோக்கி பாதயாத்திரை!

(எஸ். நிதர்ஸன்)

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையால் வருடாந்தம் பாதயாத்திரை நடத்தப்பட்டு வருகின்றது. 11 வருடமாக இவ் வருடமும் காரைநகர் ஈழத்து சிதம்பரம் நோக்கி ஆன்மீக எழுச்சியாக பாதயாத்திரை நேற்று (24) இடம்பெற்றது.

மாதகல் சம்பில்தறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான பாதயாத்திரை பல ஆலயங்களையும் தரிசித்த வண்ணம் சிவநாமங்களை உச்சரித்த வண்ணம் பொன்னாலை சந்தியைச் சென்றடைந்தது .

வருடா வருடம் பாதயாத்திரையை முன்னிட்டு பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையத்தால் சிவனடியார்களுக்கான அன்னதானம் வழங்கப்படுவது வழமை.

தொடர்ச்சியாக காரைநகர் ஆலயங்களை தரிசித்த வண்ணம் காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை மாலை சென்றடைந்து அடியார்கள் திருவெம்பாவை பூஜையில் கலந்து கொண்டனர்.

பாதயாத்திரை இடம்பெற்ற வழித்தடத்தில் பொது மக்கள் பூரண கும்பம் வைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்பொழுது அகில இலங்கை சைவ மகா சபையினர், சிவ தொண்டர்கள், சிவ மங்கையர்கள், சிவனடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# அக்கரைப்பற்றில் ஆத்மார்த்த இணைவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)


அக்கரைப்பற்று அஸ்–ஸிறாஜ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நிறைவேற்று அபிவிருத்தி குழு என்பன இணைந்து ஏற்பாடு செய்த அஸ்–ஸிறாஜின் ஆகர்ஷணங்கள் ஓர் ஆத்மார்த்த இணைவு - 2023 எனும் தலைப்பிலான நிகழ்வு அக்கரைப்பற்று ஹல்லாஜ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் போன்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வாக அமைந்திருந்தது.

நிகழ்வு பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவர், அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம் சித்திக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக, சிறப்பு பேச்சாளர்களாக பாடசாலையின் பழைய மாணவன், முன்னாள் அஸ்ஸிராஜின் சிரேஷ்ட மாணவத் தலைவன் திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.பயாஸ் றஸ்ஸாக் , ஓமான் நாட்டு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ஏ ரனீஸ், அம்பாறை மாவட்ட செயலக உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர் , அக் கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம் இல்யாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# கல்முனை நெனசல பட்டமளிப்பு விழாவில் கிழக்கு ஊடகவியலாளருக்குக் கௌரவம்

கல்முனை நெனசல பயிற்சி நிலையத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (23) இடம்பெற்றன.

கல்முனை நெனசல பயிற்சி நிலையப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.ஹாஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனைப் பிராந்தியத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர்களான நிந்தவூரைச் சேர்ந்த எம்.சஹாப்தீன் மற்றும் கல்மூனையைச் சேர்ந்த அஸ்ஹர் ஆதம் ஆகியோர் மிக நீண்ட காலமாக ஆற்றிவரும் ஊடகப் பணிக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது இருவரும் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சார்க் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பினா காந்தி டிஓரி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். டேட்மார் டொயிரிங் கௌரவ அதிதியாகவும் கல்முனை நெனசல பயிற்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவ சபையின் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி யூ.எம்.நிஸார் மற்றும் சமாதான கற்கைகள் நிலையத்தின் தலைவரும் பேராசிரியருமான எஸ்.எல்.றியாஸ் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது 96 மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதில் 25 பேர் டிப்ளோமா சான்றிதழ்களையும் 71 பேர் இளங்கலை சான் றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.




# சுதேச மருத்துவ திணைக்களத்து பதில் மாகாண ஆணையாளர்

(அஸ்ஹர் ஆதம்)



சுதேச மருத்துவ திணைக்களத்துக்குப் பதில் மாகாண ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு – புதுக்குடியிருப்பு சித்த தள ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிவந்த வைத்தியர் திருமதி ஜே.பாஸ்கரன் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பதில் மாகாண ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார்.



# உயர்தர விஞ்ஞான மாணவருக்கு செய்முறை பயிற்சி பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை டீ.எஸ்.சேனநாயக்க தேசிய கல்லூரியில் 2023 - 2025 கல்வியாண்டில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானத் துறையில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்களாலும், விஞ்ஞானத்துறை ஆசிரியர்களாலும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த உயிரியல், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் பாடங்களுக்கான செய்முறை பயிற்சிகள் அண்மையில் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் இடம்பெற்றது.



கல்லூரி அதிபர் எம்.ஏ.ஏ.எஸ்.டி. குலரெட்ண வழிகாட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் விஞ்ஞானத் துறை ஆசிரியர்கள் சிரேஷ்ட மாணவர்கள், புதிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் சாய்ந்தமருதில் புனரமைப்பு

(கே. எ. ஹமீட் )

சாய்ந்தமருது பிரதேசத்தில் 18 ஆம் வட்டாரத்தில் முதலாம் கிராம சேவகர் பிரிவு,3 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உப பொருளாளருமான ஏ.சி.எஹியா காண் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் பொருளாலருமான பைசல் காசீம், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண முன் னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், சாய்ந்தமருது முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி மேயருமான எம்.ஜ.எம்.பிர்தௌஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் மேயர் சிராஸ் மீராசாகிப்பின் பிரத்தியோக செயலாளர் ஏ.ஜீ.எம்.நிம் ஸாத் மற்றும் சாய்ந்தமருது பிரதேச கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.




# சிவனொளிபாத மலையில் புதிய மின் மாற்றிகள் பொருத்தல்

(மஸ்கெலியா நிருபர்)

சக்தி வாய்ந்த மின் மாற்றிகள் பொருத்தும் பணியில் மின் வாரிய அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது சிவனொளிபாத மலைக்கு மின்சாரம் வழங்கும் அம்பலம் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மின் இணைப்பு மின் மாற்றிக்குப் பதிலாக இரண்டு மின்மாற்றிகள் பொருத்தப்படவுள்ளன என்று மத்திய மாகாண மின் நிர்மாணப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். ஊசி மலை பகுதியில் இரண்டு மின் மாற்றிகளில் உள்ளன என மின் சார சபையின் பொறியாளர் தம்மிக்க பண்டார தெரிவித்தார்.

இந்த புதிய அதி சக்தி வாய்ந்த மின்மாற்றி அமைப்பின் ஊடாக 50 வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியான மற்றும் தரமான மின்சாரத்தை வழங்கும் திறனை சிவனொளிபாத மலைக்கு பெற்று கொடுத்து உள்ளனர் என்று நிர்மாண பொறியியலாளர் தம்மிக்க பண்டார மேலும் தெரிவித்தார்.

தர்ம சுகந்தய மனுசத் அறக்கட்டளையின் பியதிஸ்ஸ விக்கிரமரத்ன உள்ளிட்ட குழுவினர் தற்போது நீர் குழாய் அமைப்பில் குழாய்களை பதித்து, நீர் விநியோகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆண்டு சிவனொளிபாத மலை பருவகாலம் நாளை (26) தொடங்குகிறது.

யாத்திரை காலம் தொடங்கும் முன், பக்தர்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், தர்ம சுகந்தயா மனுசத் அறக்கட்டளை இந்த நல்ல பணிகளை மேற்கொண்டு வருகிறது.

# பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

(மஸ்கெலியா நிருபர்)

தலவாக்கலை பிரதேச செயலகம் மற்றும் தலவாக்கலை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தலவாக்கலை பாரதி இளைஞர் கழகத்துடன் இணைந்து மாத்தறை மாவட்ட இளைஞர் சம்மேளனம் பாடசாலையின் 50 மாணவர்களுக்குத் தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்தது.

அத்துடன் பாடசாலையில் உள்ள 3 வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசிக் கொடுத்தது.

இந்த மாபெரும் வேலை திட்டத்தை பாரதி பாடசாலையில் நடத்துவதற்கு



ஏற்பாடு செய்த தலவாக்கலை பிரதேச செயலர் மற்றும் உதவி பிரதேச செயலர், இளைஞர் சேவை மன்ற அதிகாரியும் சம்மேளனத்தின் செயலாளருமான சதீஷ், இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் சுரேஷ் கண்ணா ஆகியோருக்கும் பாடசாலை சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கல்லடி சித்திவிநாயகர் ஆலய திருவாசகம் முற்றோதல்!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை வருடா வருடம் நடத்தும் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (24) ஆலயத்தில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபையின் திருவாசகம் முற்றோதல் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பிறேமானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பாலசதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்க, ஆலய பரிபாலன சபைப் போசகர் இ.தனபாலன் சிவபுராணத்தை ஓதி திருவாசகம் முற்றோதலை ஆரம்பித்து வைத்தார்.





அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் உட்படப் பல ஓதுவார்கள் பங்கேற்று திருவாசகத்தை முறைப்படி ஓதினர்.

இந்த நிகழ்வில் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், முன்னாள் மட்டக் களப்பு மாநகர முதல்வருமான தியாகராஜா சரவணபவன், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் அடியவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# புத்தளம் உப்புச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவானது

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் உப்பு உற்பத்தியாளர்கள் நலன்புரி சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் தெரிவிற்கு கடும் போட்டி நிலவியது இதற்காக 532 பேர் தமது வாக்குகளை பதிவு செய்தனர் இதில் 318 வாக்குகளை பெற்று ரணீஸ் பதியுதீன் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் வாக்கெடுப்பின் மூலமே தெரிவு செய்யப்பட்டனர். அதிகபடியான வாக்குகளைப் பெற்ற ஆறு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவாகினர். றிஸ்வான், ஜவ்பர் , நிஸ்பாக், ஆதில், கலீல் ரஹ்மான் , சகீர் ஆகியோர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர்.வாக்கெடுப்பில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார்.




# கல்முனை வைத்தியசாலைக்கு ஸ்ரீ சத்ய சாயி நிறுவனத்தால் உதவி

**(வி.ரி.சகாதேவராஜா)**

கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு கிழக்குப் பிராந்திய ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தால் நன்கொடையாக 1.75 மில்லியன் ரூபா பெறுமதியான 229 உள்விழி வில்லைகள் வழங்கப்பட்டன.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் மற்றும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் என். நிரோஷன் ஆகியோரிடம் ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தினுடைய தலைவர் ஏ.டி. கஜன் குமார் மற்றும் ஸ்ரீ சத்ய சாயி நிறுவன உறுப்பினர்க ளால் வழங்கப்பட்டது.

# பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் கொக்குத்தொடுவாயில் முன்னெடுப்பு

## தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில்

**(மன்னார் நிருபர்)**

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (23) மாலை முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கு சூழல் அறிவை புகட்டி அவர்களுக்கு சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு முன்னெடுக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலய அதிபர் கே.சுரேந் திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும்,றொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவருமான என்.லோகேந்திரலிங்கம் கலந்து கொண்டார்.

இதன் போது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கர நேசன் மற்றும் விவசாய போதனாசிரியர் ரி.துளசிராம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு றொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.











## தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மண்ட் டுட்டு:

# ஈழத்தமிழரின் உரிமைக்காய் ஒலித்த குரல்...!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்திய போரை நிறுத்தி மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என வலிறுத்தியவரும், ஈழத்தமிழரின் உரிமைக்காய் குரல்கொடுத்தவருமான நிறவெறிக்கு எதிராக போராடிய வீரர்- டெஸ்மண்ட் டுட்டுவின் ஈராண்டு (26.12.23) நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

உலகெங்கும் மனித உரிமைகளை வலியுறுத்தி நிறவெறிக்கு எதிராகப் போராடி வந்த – நோபல் பரிசு பெற்ற – ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) உலகளாவிய சின்னம் என்றும் சிறந்த தார்மீக மனிதன் என்று விவரிக்கப்பட்டவரே டெஸ்மண்ட் டுட்டு. தனது 90 ஆவது வயதில், 26.12.2021 அன்று தனது குரலை நிரந்தரமாகவே நிறுத்திக்கொண்டார்.

### ஈழத்தமிழர்களின் உரிமைக் குரல்!

சிங்கள அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்திய போரை நிறுத்தி மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என டெஸ்மன்ட் டுட்டு வலிறுத்தி வந்தார்.

தனது இறுதிக் காலம்வரை ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்தார்.

மனித உரிமைகளுக்காகவும் உலக சமாதானத்துக்காகவும் தனது தள்ளாத வயதிலும் போராடிவந்த பேராயர் டெஸ்மன்ட் டுட்டு, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நீண்ட காலம் குரல் கொடுத்தவர்.

ஈழத் தமிழர்கள்மீது பௌத்த சிங்களப் பேரினவாதம் நிகழ்த்தியது யுத்தக் குற்றமல்ல. அது இனப் படுகொலையே என்று சர்வதேச அரங்கில் உறுதிபடக் கூறிநின்றவர்.

உலக அமைதிக்கான குரலாக ஒலித்ததால் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் டெஸ்மன்ட் டுட்டு. தென்னாபிரிக்காவைத் தாண்டியும் பூமிப்பந்தில் எங்கெல்லாம் மனிதம் வதைபடுகின்றதோ அங்கெல்லாம் கூட அட்டூழியங்களுக்கு எதிரான ஒரு உலகின் முகவரியாகத் திகழ்ந்தவர்.



### உலகின் முகவரியாக திகழ்ந்தவர்

பேராயரான டெஸ்மன்ட் டுட்டு, மனிதம் என்பது இனம், மதம், மொழி என்ற எல்லைகளைக் கடந்த ஓர் உயரிய மாண்பு என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். இதனால், இஸ்ரேலிய யூதர்களால் பாலஸ்தீனியர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகளுக்கு எதிராகக் குரலெழுப்பி வந்தார்.

ஈராக் மீது பொய்க் காரணங்கள் கூறிப் போர் தொடுத்தார்கள் என்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், முன்னாள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் இருவரையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறும் வலியுறுத்தி வந்தவர்.

நீண்ட காலமாக நிறப்பாகுபாட்டை சமாதானமான முறையில் தீர்த்து, நிறவெறிக்கு எதிராகப் போராடிய முன்னாள் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, 2021 டிசெம்பர் 26 அன்று தனது 90 ஆவது வயதில் காலமானார்.

**(17ஆம் பக்கம் பார்க்க)**



# ஈழத்தமிழரின் உரிமைக்காய் ஒலித்த குரல்...!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வன்முறையற்ற எதிர்ப்புப் போராட்டம்**

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மக்கள் முன்னணி அரசியலில் ஒரு முக்கிய நபரான டுட்டு, அவரது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஆசிரியரான பின்னர், 1961 இல் பாதிரியாராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் ஆறு ஆண்டுகள் பிரிட்டனில் படித்து, புகழ்பெற்ற புனித ஒழுக்கத்தை வளர்த்துக் கொண்டார். தென்னாபிரிக்காவுக்குத் திரும்பிய அவர், தேவாலயப் படிநிலையின் மூலம் உயர்ந்து 1978 இல் தென்னாபிரிக்க தேவாலய சபையின் பொதுச் செயலாளரானார்.

1980 களில் கறுப்பின இளைஞர்களுக்கும், தென்னாபிரிக்க படையினருக்கும் இடையே அதிகரித்துவரும் உயிராபத்தான மோதல்களுக்கு மத்தியில் வன்முறையைப் பயன்படுத்துவதை எதிர்த்து, நிறப்பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழியாக வன்முறையற்ற எதிர்ப்புகளையும் சமரசத்தையும் டுட்டு ஏற்றுக்கொண்டு அதற்காகப் பணியாற்றினார்.

அத்துடன் வன்முறையற்ற ஜனநாயக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு வெளிநாடுகளின் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வழிமுறையாக தென்னாபிரிக்கா மீதான புறக்கணிப்பு மற்றும் தடைகளை அவர் ஆதரித்தார்.

**சர்வதேசம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி**

நிறப் பாகுபாட்டு எதிர்ப்பு இயக்கத்தின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரான டுட்டு, அமெரிக்க மார்ட்டின் லூதர் கிங்குடன் ஒப்பிடப்பட்டார்.

1984 ஆம் ஆண்டில், தென்னாபிரிக்காவில்நிறப்பாகுபாட்டுபிரச்சினையைத் தீர்ப்பதற்கான பிரச்சாரத்தில் ஒரு ஐக்கியப்படுத்தும் அவரது பங்களிப்புக்காக டுட்டுவுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**கறுப்பின பெரும்பான்மை ஆட்சி மாற்றம்**

பெப்ரவரி 1990 இல், தென்னாபிரிக்க அதிபர் டி கிளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகள் மீதான தடையை நீக்குவதாக அறிவித்தார். நிறப் பாகுபாட்டு மற்றும் வெள்ளை சிறுபான்மை ஆட்சியின் முடிவுக்குச் சைகை காட்டினார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், ஆளும் தேசியக் கட்சி மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கு இடையே பெரும்பான்மை ஆட்சிக்கு மாறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் உரையாசிரியராக டுட்டு முக்கிய பங்கு வகிக்க வேண்டியிருந்தது.

**மண்டேலாவுக்கு விடுதலை**

27 ஆண்டுகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், மண்டேலாவுக்கு நம்பகமான வழித்தடமாக டுட்டு மிகவும் பயனுள்ளவராக இருந்தார்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சில மாதங்களுக்குள், மண்டேலா அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து, நியூயோர்க் நகரம் மற்றும் பொஸ்டனில் வெகுஜன பார்வையாளர்கள் முன்னிலையில் பேசினார்.

**நல்லிணக்க ஆணைய தலைமை**

நிறப் பாகுபாட்டுக்குப் பின்னர் டுட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் (TRC) தலைவராக இருந்து தென்னாப்பிரிக்காவுக்கு உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய சேவை செய்தார்.

அப்போது ஜனாதிபதியாக இருந்த மண்டேலா, ஆணைக் குழுவின் தலைவராக டுட்டுவை தேர்ந்தெடுத்தார். 1996 இல் அமைக்கப்பட்ட அதன் நோக்கம், நிறப் பாகுபாட்டின் கீழ் பல்லாயிரக் கணக்கான கறுப்பினத் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் மரணம் மற்றும் சித்திரவதைகளுக்கு காரணமானவர்கள் மீதான விசாரணைகளுக்கான பரந்த கோரிக்கைகளை முன்னெடுப்பதாகும்.

அதிபர் டி கிளார்க் மற்றும் அவரது தேசியக் கட்சி முதலில் நிறப் பாகுபாட்டின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்குப் பொது மன்னிப்புக் கோரியது. அப்போது பாதுகாப்புப் படைகள் கலகம் செய்யும் என்று அச்சுறுத்தியது. பல வருட பேச்சுகளுக்குப் பின்னர், ஒரு சமரசத்துக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. 1998 இல் வெளியிடப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் ஐந்து தொகுதி அறிக்கையில் வெள்ளை இன அரசால் இனவெறி கொடூரமாக திணிக்கப்பட்டது என்பதை உறுதிப் படுத்தியது.

நிறப் பாகுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கான முடிவு தென்னாபிரிக்காவின் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் வெகுஜனப் புரட்சியை நோக்கமாகக் கொண்டதாக, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் எடுத்த பாதை வடிவமைக்கப்பட்டதாக எடுத்துரைத்தது.

**சர்வதேச புகழாரம்**

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) தலைவர் சிரில் ராமபோசா, டுட்டுவை 'உலகளாவிய சின்னம்' மற் றும் 'சிறந்த தார்மீக மனிதன்' என்று விவரித்தார்.

அவர் ஏழு நாள்கள் உத்தியோக பூர்வ துக்க அனுஷ்டானத்துடன் கேப்டவுனில் உள்ள செயின்ட ஜோர்ஜ் தேவாலயத்தில் இரண்டு நாள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அரச இறுதிச் சடங்கு 2021 டிசெம்பரில் நடைபெற்றது.

நிறவெறிக்கு எதிரான போராட்டத்திலும், புதிய தென்னாபிரிக்காவை உருவாக்கும் போராட்டத்திலும் ஒரு முக்கியமான நபர் என்று விவரித்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, "டுட்டு எனக்கும் இன்னும் பலருக்கும் ஒரு வழிகாட்டி, நண்பர் மற்றும் தார்மீக திசைகாட்டி" என்று குறிப்பிட்டுள்ளார்.





# 200 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

(எஸ். நிதர்ஸன்)

யாழ். பிளவத்தை அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்றுக் காலை பாடசாலை அரங்கில் பாடசாலையின் அதிபர் முருகதாசன் தலைமையில் இடம்பெற்றன.

இதன்பொழுது பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியீடு இடம்பெற்றது. பாடாசலையின் அதிபரால் மலர் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

முதலாவது பிரதியை வடமகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் பெற்றார். தொடர்ச்சியாக மாணவர்களு டைய கலைநிகழ்வுகள், பரிசில் வழங் கல்கள் இடம்பெற்றன.

இதன்போது வடகமாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரை யாளர் கலாநிதி தனபாலன், வலயக் கல்வி பிரதி கல்வி பணிப்பாளர் மதிய ழகன், மத்திய கல்வி அமைச்சின் ஆலோசகரும் ஓய்வு நிலை மாகாண கல்வி பணிப்பாளருமான தணிகாசலம் பிள்ளை , ஆசிரியர்கள், பழைய மாண வர்கள், பெற்றோர்கள் , மாணவர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்ட னர்.





# வெளி நாடுகளுக்குப் படிக்கச் சென்ற 403 இந்திய மாணவர்கள் உயிரிழப்பு!

2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குப் படிக்கச் சென்ற 403 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என அதிர்ச்சி தகவலொன்று வெளியாகியுள்ளது.

இந்திய மாணவர்கள் அதிகம் இருக்கும் 34 நாடுகளை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கையின் படி " கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் இயற்கையான காரணங்கள், தற்கொலைகள் மற்றும் விபத்துக்கள் உள்ளிட்ட பல காரணங்களால் குறைந்தது 403 இந்திய மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில் 2018 ஆம் ஆண்டு முதல் கனடாவில் 91 பேரும், பிரித்தானியாவில் 48 பேரும், ரஷ்யாவில் 40 பேரும், அமெரிக்காவில் 36 பேரும், அவுஸ்ரேலியாவில் 35 பேரும், உக்ரைனில் 21 பேரும், ஜெர்மனியில் 20 பேரும், சைப்ரஸில் 14 பேரும், இத்தாலி மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் தலா 10 பேரும் உயிரிழந்துள்ளனர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த நிலையில், இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மத்திய அமைச்சர் முரளிதரன், "வெளிநாடுகளில் உள்ள இந்திய மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதில் மத்திய அரசு தொடர்ந்து தீவிரமாக செயற்பட்டு வருகின்றது" - என்றார்.

# இந்தியாவில் அதிகரிக்கும் கொவிட் பரவல்: அனைத்து மாநிலங்களுக்கும் அவசர உத்தரவு

இந்தியா முழுவதும் இதுவரை 23 பேருக்கு 'ஜெ.என். 1' வகை கொவிட் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் பரவல் மீதான கண்காணிப்பை தீவிரப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் இந்திய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், ராஜஸ்தானில் கடந்த 24 மணி நேரத்தில் 11 பேருக்கு கொவிட் தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளது.

இது குறித்து மாநில சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில்,



மாநிலம் முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் 11 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டதையடுத்து கொவிட் வைரஸிற்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தரவுகளின்படி, கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் மொத்தம் 656 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ள நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவில் தற்போது கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 3,742 ஆக அதிகரித்துள்ளது.

# ஹிஜாப் தடை நீக்கவில்லை: கர்நாடகாவில் முதல்வர் அறிவிப்பு

கர்நாடக மாநிலத்தில் கடந்த பா.ஜ.க. ஆட்சியின்போது கல்வி நிலையங்களில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் முதல்வர் சித்தராமையா, "உணவு, உடை ஆகியவை அவரவர் தனிப்பட்ட விருப்பம். இதில் மற்றவர்கள் தலையிட முடியாது. ஹிஜாப் அணிந்து பள்ளிக்கு செல்ல தடை எதுவும் இல்லை. அதனை ஏன் எதிர்க்க வேண்டும். ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசித்துள்ளேன்""என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு முஸ்லிம் அமைப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். அதேவேளையில், பா.ஜ.க, பஜ்ரங் தளம், விஷ்வ ஹிந்து பரிஷத் ஆகிய அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏ.பி.வி.பி. மாணவ அமைப்பினர் இதனை கண்டித்து கர்நாடக மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் கர்நாடக பா.ஜ.க. தலைவர் விஜயேந்திரா, "மாணவர்களை மத அடிப்படையில் பிரிக்கும் வகையில் சித்தராமையா முடிவெடுத்துள்ளார். அவரது இந்த முடிவு கல்வி நிலையங்களில் மதவாதம் நுழைய வழிவகை செய்துள்ளது. தங்களின் அரசியலுக்கு காங்கிரஸார் முஸ்லிம்களை பயன்படுத்தக் கூடாது. கர்நாடக உயர்நீதிமன்றம் உறுதி செய்த உத்தரவை ரத்து செய்யும் சித்தராமையாவுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள்"" என்றார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல்வர் சித்தராமையா, "ஹிஜாப் மீதான



தடையை ரத்து செய்வீர்களா? என கேள்வி எழுப்பினர். அதனால் அவ்வாறு பதிலளித்தேன். ஆனால் இன்னும் ஹிஜாப் மீதான தடையைநீக்கவில்லை. அந்த விவகாரத்தில் இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை. இதுகுறித்து அதிகாரிகள், அமைச்சர்கள் உள்ளிட்டோருடன் ஆலோசித்து முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித் துள்ளார்.

# அல் மகாசி அகதி முகாம் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்!

## - 70 பேர் உயிரிழப்பு



இஸ்ரேலிய விமானத் தாக்குதலில், அல்-மகாசி அகதிகள் முகாமில் சுமார் 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவில் ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

அந்த பகுதியில் அதிகளவான குடும்பங்கள் வசித்து வருவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அதன் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் பல அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் நடந்தப்பட்ட தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன என ஹமாஸின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்கள் அடர்த்தியான குடியிருப்பு தொகுதி அழிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் பேச்சாளர் அஷ்ரஃப் அல்-குத்ரா தெரவித்துள்ளார்.

# ஈரானின் மனித உரிமை நிலைமை: 30 நாடுகள் எதிராக வாக்களிப்பு!



இந்த வாரம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் கொண்டுவரப்பட்ட ஈரானின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான தீர்மானத்துக்கு இலங்கை உள்ளிட்ட 30 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன.

ஈரானின் மனித உரிமை நிலைமைகள் குறித்த இந்த தீர்மானத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபை கவலைகளை வெளியிட்டிருந்தது.

இலங்கையுடன், சக தெற்காசிய நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் "ஈரானின் மனித உரிமை நிலைமை" என்ற தலைப்பிலான இந்த தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன.

பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் மற்றும் மாலைத்தீவுகள் ஆகிய நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியுள்ளன.

இந்த தீர்மானத்துக்கு, 78 பேர் ஆதரவாகவும், 30 பேர் எதிராகவும், வாக்களித்ததுடன், 68 பேர் வாக்களிப்பை தவிர்த்திருந்தனர்.

இணையத்தளம் உள்ளிட்ட பல பொது வெளிகளில் ஈரானில் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பொது மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் அனைத்து வகையான முறையான பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் தொடர்புடைய மனித உரிமை மீறல்களையும் அகற்றுவதற்கு ஈரானிடம் கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

அநியாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள, மனித உரிமைகள் பாதுகாவலர்களையும், இந்த அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுப்பவர்களையும் விடுவிக்குமாறு ஈரானிய அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

# கனடாவில் பொருள்களின் விலையில் பாரிய அதிகரிப்பு

கனடாவில் பணவீக்கம் காரண மாக பண்டிகைக் காலத்தில் கனேடியர்கள் தங்களது செலவுகளை குறைத்துக் கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கனடாவில் உணவு வங்கிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் ஆறு பேரைக் கொண்ட குடும்பமொன்றின் மரபு ரீதியான நத்தார் இராப்போசன விருந்துபசாரத்திற்கு சராசரியாக 104.85 டொலர்கள் தேவைப்படும் என தற்பொழுது கணிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம் உணவுப் பொருள்களின் விலைகளில் பாரியளவு மாற்றங்கள் பதிவாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.